நகர்மன்றம்

உதகமண்டலம்

30.10.2023

அன்புடையீர்

வணக்கம், இந்நகர்மன்ற அக்டோபர் 2023ம் மாத சாதாரணக் கூட்டம் வருகின்ற 30.10.2023 திங்கள்கிழமை அன்று காலை 11.00 மணியளவில் நகரமன்ற தலைவர் திருமதி.எம்.வாணீஸ்வரி அவர்களின் தலைமையில் நகர்மன்ற கூட்டத்தில் நடைபெறுவதால் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளும் படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது. இத்துடன் கூட்டப்பொருள்கள் இணைக்கப்பட்டுள்ளன.

**முன்னிலை : திருமதி.எம்.வாணீஸ்வரி, நகர மன்ற தலைவர்**

1. இந்நகராட்சி அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் 1 சுருக்கெழுத்து தட்டச்சர் மற்றும் 3 தட்டச்சர் பணியிடங்கள் பல ஆண்டுகளாக காலியாக உள்ளது.

இந்நகராட்சி அனைத்து பிரிவுகளிலும் அலுவலக பணிகள் தொடர்பாக தட்டச்சு செய்தல், பொது நலபிரிவில் பிறப்பு மற்றும் இறப்பு விபரங்கள் பதிவு செய்தல், திடக்கழிவு மேலாண்மை குறித்த அறிக்கை பட்டியல், நகரமைப்பு பிரிவில் வழக்குகள், கள், BPL-Updation, தேர்தல் பணிகள், UAL கட்டிடங்கள் தொடர்பான பணிகள், நகர்மன்ற பொருள் தட்டச்சு செய்தல் மற்றும் முதலமைச்சரின் தனி பிரிவு மனு தொடர்பாக தட்டச்சு செய்தல், கணக்கு மற்றும் தணிக்கை அறிக்கை தயார் செய்தல் போன்ற அத்தியாவசிய பணிகள் உரிய காலத்தில் தட்டச்சு செய்து உயர் அதிகாரிகள் அலுவலவகத்திற்கு அனுப்ப வேண்டியுள்ளதால்,ஒப்பந்தப்புள்ளி கோரி தனி அலுவலர் மன்ற தீர்மான எண்-2462, நாள்-25.01.2021ல் அனுமதி பெற்று,திருவாளர்.ஸ்டார் கான்ராக்டர், உதகை என்ற தனியார் வெளிக்கொணர்வு நிறுவனத்திற்கு பணி உத்தரவு 01.01.2021ம் தேதியில் வழங்கப்பட்டது.

மேற்படி நிறுவனத்திற்கான பணி உத்தரவு காலம் வரும் 05.11.2023ம் தேதியுடன் முடிவடைய இருப்பதால்,ஆணையாளர் அவர்களின் நேரடி அறிவுரையின் படியும் தட்டச்சர் பணியிடங்கள் காலியாகவே உள்ள நிலையில் பணியின் முக்கியத்துவத்தை முன்னிட்டு நிர்வாக நலன் கருதி அடுத்து ஒப்பந்தப்புள்ளி கோரி தனியார் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கும் வரை தற்போது பணி செய்து வரும் மேற்படி தனியார் நிறுவனத்தின் பணி உத்தரவினை ஏற்கனவே வழங்கி வரும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அங்கீகரித்துள்ள விலை விகிதத்திலேயே 06.11.2023 முதல் 05.02.2024 வரை முன்று மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்து வழங்கவும், மேற்காணும் பணிக்காகும் உத்தேச செலவினம் ரூ.2.00 லட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு-**

1. **பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றம் அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்காணும் பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 லட்சத்தினை இந்நகராட்சியின் வருவாய் மற்றும் முலதன நிதியின் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.**

   **(ந.க.எண்-எச்1/11527/2019)**

   **நகர்மன்ற தீர்மான எண்.1388 – அனுமதிக்கப்பட்டுள்ளது.**

2. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண்- TN 43 B 9612 –க்கு கீழ் காணும் பழுதுகளை சரிசெய்தும், புதியதாக பொருத்தப்பட வேண்டிய பொருட்களுக்குண்டான அனுமதியும் கீழ்க்கண்டவாறு. இதற்கு உண்டான உத்தேச செலவீனம் ரூ. 3,00,000/- மட்டும்.

1. 4 Wheel Over oiling
2. Self Motor Dyanmo and Wheelling Checkup
3. Spring Cut Bush
4. Clutch Overoil
5. Full Painting and Tinkering work
6. 4 Wheel Tyres New Purchase and filling with wheel Alloyment.
7. Oil service and Air fitter changing .

   எனவே, மேற்கண்ட பணிகளை அவசர அவசியம் கருதி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –**

**மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணிகளை மேற்கொள்ளலாம்.**

**(ந.க.எண்-3361/2023/எச்2)**

**நகர்மன்ற தீர்மான எண்.1389 – அனுமதிக்கப்பட்டுள்ளது..**

3. உதகமண்டலம் நகராட்சி பகுதியில் உள்ள 36 வார்டுகளிலும் கொசுக்கள் மூலம் பரவக்கூடிய டெங்கு மற்றும் இதர காய்ச்சல்கள் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள தேவையான கொசு ஒழிப்பு மருந்து பைரீத்தம் ஆகிய மருத்துகள் இருப்பில் இல்லாததால் கீழ்க்கண்ட மருத்துகளை கொள்முதல் செய்ய

1. Pyrethrum 2% Extract – 100 Liter
2. Temephos 50% EC -100 Liter

தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகம் (TNMSC) அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் TNMSC நிர்ணயம் செய்துள்ள விலை விகிதத்தில் கொள்முதல் செய்து

இதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.4,00,000/- இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –**

**நகரமன்ற அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்-7456/2023/எச்2)**

**நகர்மன்ற தீர்மான எண்.1390 – அனுமதிக்கப்பட்டுள்ளது..**

4. இயக்குநர், பொதுசுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துகள் துறை சென்னை, அவர்களின் சுற்றறிக்கையின் படி உதகமண்டலம் நகராட்சி பகுதியில் டெங்கு மற்றும் கொசுக்கள் மூலம் பரவும் (நோய்கள்) காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகாக கொசு ஒழிப்பு பணியாளர்கள் நியமனம் செய்து தினசரி அறிக்கைகள் மாவட்ட சுகாதார துறைக்கு அனுப்ப வேண்டியுள்ளது.

உதகமண்டலம் நகராட்சிக்கு மாவட்டம் நிர்வாகத்தின் அறிவுரையின் படி 85 கொசு ஒழிப்பு பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளது. உதகமண்டலம் நகராட்சியின் சீதோஷ்ண நிலை மற்றும் நிதி நிலையினை கருத்தில் கொண்டு சுமார் 35 கொசு ஒழிப்பு பணியாளர்கள் மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்துள்ள தினக்கூலி அடிப்படையில் ஒப்பந்தாரர் மூலம் வெளிக்கொணர்வு முகமை அடிப்படையில் நிர்ணயம் செய்து உதகமண்டலம் நகராட்சி பகுதியில் கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.40,00,000/- இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு-**

**மன்ற அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்- 3261/2019/எச்2)**

**நகர்மன்ற தீர்மான எண்.1391 – அனுமதிக்கப்பட்டுள்ளது..**

5. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5 மேல் கோடப்பமந்து கோத்தகிரி சாலையில் மாநில நெடுஞ்சாலைத் துறையின் மூலம் சாலை விரிவாக்க பணி நடைபெற்று வருகிறது. இதனால் மேற்கண்ட சாலை விரிவாக்கப் பணியின் போது சாலையின் ஓரத்தில் பதிக்கப்பட்டு இருந்த 8" DI குழாய் ஆனது எதிர்பாராத நிலையில் பழுதடைந்து விட்டது. இதனால் பழுதடைந்துள்ளதால் இந்த பழுதடைந்த குழாய் வழியாக குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வந்த கீழ் கோடப்பமந்து, ஆரணி ஹவுஸ். ஸ்டோன் ஹவுஸ், வண்ணாரப்பேட்டை ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் 8" குடிநீர் குழாய் அமைக்க நகர்மன்ற தீர்மான எண்.1130 நாள். 30.03.2023 ல் ரூ.9.00/- இலட்சத்திற்கு அனுமதி பெறப்பட்டு பணி மேற்கொள்ளும் போது

அவ்விடத்தில் 4" DI குடிநீர் குழாயும் பழுது ஏற்பட்டு இருந்தால் அதனை உடனடியாக மாற்ற வேண்டி இருந்தால் 4" குடிநீர் குழாய் மற்றும் 8" குடிநீர் குழாய் ஆகியவை சேர்த்து பணி மேற்கொள்ளப்பட்டது. எனவே மேற்கண்ட இடத்திற்கு கூடுதலாக பணி மேற்கொள்ளப்பட்டதற்கு திருத்திய மதிப்பீட்டுத் தொகை ரூ.11.45 இலட்சத்திற்கு நகர் மன்ற அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்பட்டுகிறது.

**அலுவலக குறிப்பு-**

**அனுமதி வழங்கலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண்.1392 – அனுமதிக்கப்பட்டுள்ளது..**

6. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.30, டேவிஸ் டேல் பகுதியில் கழிவுநீர் குழாய்கள் மற்றும் தொட்டிகள் மிகவும் பழுதடைந்ததால் கழிவுநீர் தார் சாலையில் செல்வதால் பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டுனர்கள் மிகவும் சிரமப்படுவதால் மேற்கண்ட கழிவுநீர் குழாய்கள் மற்றும் தொட்டியினை சீரமைத்து தரும்படி நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளதன் பேரில் இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.6.20/- இலட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ள நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு-**

**அனுமதி வழங்கலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண்.1393 – அனுமதிக்கப்பட்டுள்ளது..**

7. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.9ல் பெரியார் காலனி பகுதியில் திருமதி.சுசீலாமேரி க.எண்.74 w அருகே மழைநீர் கால்வாய் மற்றும் கழிவுநீர் கால்வாய் இல்லாத காரணத்தால் மழைகாலங்களில் அதிக அளவிலான மழைநீர் மேற்கண்ட வீட்டின் பகுதியில் வருவதால் இங்குள்ள தடுப்பு சுவர் இடிந்துள்ளது. எனவே மேற்கண்ட இடத்தை சீரமைத்து தர நகரமன்ற உறுப்பினர் கோரியுள்ளார். எனவே மேற்கண்ட இடம் நேரில் ஆய்வு செய்து கழிவுநீர் கால்வாய், கழிவுநீர் கால்வாய் மற்றும் தடுப்புசுவர் அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச செலவினம் ரூ.8.00/- இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது-

**அலுவலக குறிப்பு-**

**அனுமதி வழங்கலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண்.1394 – அனுமதிக்கப்பட்டுள்ளது..**

8. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.11ல் காந்தல் கீழ் பள்ளிவாசல் பகுதியில் கழிவுநீர் குழாய் சுமார் 20 ஆண்டுகளுக்கு மேல் அமைக்கப்பட்ட செங்கல் தொட்டிகள் பழுதடைந்துள்ளதால் கழிவுநீர் செல்ல வழியில்லாமல் நடைபாதையிலேயே செல்வதால் பொதுமக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. எனவே மேற்கண்ட நடைபாதையிலுள்ள கழிவுநீர் கால்வாய் மற்றும் நடைபாதையினை சீரமைத்து தரும்படி நகர மன்ற உறுப்பினர் கோரிக்கை விடுத்துள்ளதன் பேரில் இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டு பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.6.00/- இலட்சத்திற்கு நகராட்சி வடிகால் மற்றும் குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ள நகர்மன்ற அனுமதிக்காக.

**அலுவலக குறிப்பு-**

**நகர்மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண்.1395 – அனுமதிக்கப்பட்டுள்ளது..**

9. உதகமண்டலம் நகராட்சி வார்டு எண்.13ல் ஸ்டேட் பேங்க் காலனி பகுதியில் கழிவுநீர் குழாய்கள் மற்றும் தொட்டிகள் மிகவும் பழுதடைந்துள்ளதால் கழிவுநீர் சிமெண்ட் கான்கீரிட் சாலையில் வழிந்தோடுகிறது. இதனால் மேற்கண்ட பகுதியில் பொதுமக்கள் வாகன ஓட்டுனர்கள் சாலையை கடக்க சிரமப்படுவதோடு சுகாதார சீர்கேடு ஏற்படும் சூழ்நிலையும் ஏற்படுவதால் மேற்கண்ட இடத்தில் பழுதடைந்துள்ள கழிவுநீர் குழாய்கள் மற்றும் தொட்டியினை சீரமைத்து தரும்படி நகரமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கை விடுத்ததன் பேரில் இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டு பழுதடைந்த கழிவுநீர் குழாய்கள் மற்றும் தொட்டியினை சீரமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.6.80 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு-**

**அனுமதி வழங்கலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண்.1396 – அனுமதிக்கப்பட்டுள்ளது..**

10. திருப்பூர் நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.1382/2023/பி1, நாள்.01.09.2023-ல் வரிசை எண் 6 முதல் 10 வரையுள்ள கீழ்கண்ட பணிகளுக்கு 15-வது மத்திய நிதிக்குழு 2023 – 2024 (Tied Grant) நிதியின் கீழ் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| Sl.No | Name of the work | Est Amount |
|---|---|---|
| 1 | Supply delivery and fixing of 750 kgs/hr capacity organic waste shredding machine in theetukkal compost yard | Rs.3.50 lakhs |
| 2 | Supply and delivery of fully automatic hydralic bailing machine (capacity 100 kgs – 120 kgs/ bail) in theetukkal compost yard | Rs.3.00 lakhs |
| 3 | Supply and erection of 100 HP non clog submerssible pump at minigarden sewage pumping station | Rs.30.00 lakhs |
| 4 | Supply and erection of 75 HP non clog submerssible pump flex compensated magnetic soft starter in Minigarden sewage pumping station in UMC | Rs.34.00 lakhs |
| 5 | Supply and erection of surge protection valve @ parsons valley head works. | Rs.32.00 lakhs |
| | Total | **Rs.102.50 lakhs** |

மேற்கண்ட பணிகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு-**

**அனுமதி வழங்கலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண்.1397 – அனுமதிக்கப்பட்டுள்ளது..**

11. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட காந்தல் கழிவுநீரேற்றும் நிலையம் மற்றும் லாரி மூலம் குடிநீர் பிடிக்கும் இடத்தில் சிமெண்ட் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதால் வாகனங்கள் மேற்கண்ட இடத்தில் நின்று குடிநீர் பிடிக்க இயலாத சூழ்நிலை உள்ளது. மேலும் மழை காலங்களில் மழைநீர் சாலையில் ஆங்காங்கே தேங்கி நிற்கிறது. எனவே பணியாளர்களும் மேற்கண்ட இடத்தில் பணி மேற்கொள்ள சிரமப்படுகிறார்கள். எனவே மேற்கண்ட சிமெண்ட் சாலையினை சீரமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.4.80/- இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு-**

**அனுமதி வழங்கலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண்.1398 – அனுமதிக்கப்பட்டுள்ளது..**

12. இந்நகராட்சியில் திட்டப்பணிகளுக்கு 2022 – ம் ஆண்டில் மதிப்பீடு தயாரிக்கும்போது சரக்கு மற்றும் சேவைவரி 12% சேர்த்து மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பட்டியல் வழங்கப்பட்டுள்ளது. GST Counsil Department of Revenue Ministry of India Government of India அவர்களால் 18.07.2022 முதல் 12% இருந்து 18% சதவிதமாக தொகை மாற்றம் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

திரு.கே. இ, கிருஷ்ணதாஸ் ஒப்பந்ததாரர் இந்நகராட்சியில் 18.07.2022 ற்கு பின்னர் பணி மேற்கொள்ளப்பட்டு.. பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளதில் 12% சதவீதம் கணக்கிட்டு பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ஒப்பந்ததாரருக்கு 18% சதவீதம் கணக்கிட்டு மீதமுள்ள 6% சதவீதம் தொகை ரூ.15,77,710/- ஒப்பந்ததாரருக்கு வழங்க மன்றத்தில் அனுமதி வேண்டப்படுகிறது..

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண்.1399 – அனுமதிக்கப்பட்டுள்ளது..**

13. இந்நகராட்சியில் திட்டப்பணிகளுக்கு 2022 – ம் ஆண்டில் மதிப்பீடு தயாரிக்கும்போது சரக்கு மற்றும் சேவைவரி 12% சேர்த்து மதிப்பீடு தயார் செய்யப்பட்டு. பட்டியல் வழங்கப்பட்டுள்ளது. GST Counsil Department of Revenue Ministry of India Government of India அவர்களால் 18.07.2022 முதல் 12% இருந்து 18% சதவிதமாக தொகை மாற்றம் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

திரு.எஸ்.நாகராஜ் ஒப்பந்ததாரர், இந்நகராட்சியில் 18.07.2022 -ற்கு பின்னர் பணி மேற்கொள்ளப்பட்டு . பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளதில் 12% சதவீதம் கணக்கிட்டு பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ஒப்பந்ததாரருக்கு 18% சதவீதம் கணக்கிட்டு மீதமுள்ள 6% சதவீதம் தொகை ரூ.19,29,517/- ஒப்பந்ததாரருக்கு வழங்க மன்றத்தில் அனுமதி வேண்டப்படுகிறது..

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்**

**நகர்மன்ற தீர்மான எண்.1400 – அனுமதிக்கப்பட்டுள்ளது..**

14. இந்நகராட்சியில் திட்டப்பணிகளுக்கு 2022 – ம் ஆண்டில் மதிப்பீடு தயாரிக்கும்போது சரக்கு மற்றும் சேவைவரி 12% சேர்த்து மதிப்பீடு தயார் செய்யப்பட்டு. பட்டியல் வழங்கப்பட்டுள்ளது. GST Counsil Department of Revenue Ministry of India Government of India அவர்களால் 18.07.2022 முதல் 12% இருந்து 18% சதவிதமாக தொகை மாற்றம் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

திரு.என். ராஜ்குமார் ஒப்பந்ததாரர் இந்நகராட்சியில் 18.07.2022 -ற்கு பின்னர் பணி மேற்கொள்ளப்பட்டு . பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளதில் 12% சதவீதம் கணக்கிட்டு பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ஒப்பந்ததாரருக்கு 18% சதவீதம் கணக்கிட்டு மீதமுள்ள 6% சதவீதம் தொகை ரூ.31,821/- ஒப்பந்ததாரருக்கு வழங்க மன்றத்தில் அனுமதி வேண்டப்படுகிறது..

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்**

**நகர்மன்ற தீர்மான எண்.1401 – அனுமதிக்கப்பட்டுள்ளது**

15. இந்நகராட்சியில் திட்டப்பணிகளுக்கு 2022 – ம் ஆண்டில் மதிப்பீடு தயாரிக்கும்போது சரக்கு மற்றும் சேவைவரி 12% சேர்த்து மதிப்பீடு தயார் செய்யப்பட்டு. பட்டியல் வழங்கப்பட்டுள்ளது. GST Counsil Department of Revenue Ministry of India Government of India அவர்களால் 18.07.2022 முதல் 12% இருந்து 18% சதவிதமாக தொகை மாற்றம் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

திரு. என். அர்ஜுன் ஒப்பந்ததாரர் இந்நகராட்சியில் 18.07.2022 -ற்கு பின்னர் பணி மேற்கொள்ளப்பட்டு . பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளதில் 12% சதவீதம் கணக்கிட்டு பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ஒப்பந்ததாரருக்கு 18% சதவீதம் கணக்கிட்டு மீதமுள்ள 6% சதவீதம் தொகை ரூ.3,21,598/- ஒப்பந்ததாரருக்கு வழங்க மன்றத்தில் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண்.1402 – அனுமதிக்கப்பட்டுள்ளது**

16. இந்நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளில் உள்ள பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் பணிகள் நகராட்சி பொறியியல் பிரிவின் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றது. இதில் பார்சன்ஸ் வேலியில் மூன்று நீரேற்று நிலையங்கள் உள்ளன. மேலும் உதகை நகரில் ஏழு நீரேற்று நிலையங்கள் உள்ளன. இதிலிருந்து 24 மணி நேரமும் பொதுமக்களுக்கு தண்ணீர் அளிக்க வேண்டியுள்ளது. எனவே நிரந்தர பணியாளர்கள் ஓய்வு பெற்றுவிட்ட நிலையில் தற்போது 7 நபர்கள் மட்டும் உள்ளதால் 36 வார்டுகளிலும் பொதுமக்களுக்கு அன்றாடம் தண்ணீர் அளிப்பதற்கு இயலாத நிலை உள்ளது. எனவே பொதுமக்களுக்கு போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தால் சரியாக குடிநீர் வழங்க முடிவதில்லை. எனவே தனியார் நிறுவனத்தின் மூலம் 6-நபர்கள் தற்காலிகமாக பணி மேற்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. மேலும் பணியின் அவசர அவசியம் கருதி மேற்குறிப்பிட்ட பணிக்கான

தோராய மதிப்பீட்டு தொகை ரூ.31.00 இலட்சத்திற்கு ஒரு ஆண்டு காலம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது. நகராட்சி குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ளலாம்.

**அலுவலக குறிப்பு:**

1. **அனுமதி வழங்கலாம்.**
2. **அவசர அவசியம் கருதி பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் நகர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது,.**
   **நகர்மன்ற தீர்மான எண்.1403 – அனுமதிக்கப்பட்டுள்ளது**

17. தற்போது நகராட்சி நிர்வாகம் இயக்குநர், சென்னை அவர்களின், உதகமண்டலம் நகராட்சியில் தினசரி மார்க்கெட் Phase - I, Phase–II, நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் , SFC Area Fund, ஆகிய திட்டங்களின் கீழ் பணிகளுக்கு, நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டு பணி மேற்கொள்ள வேண்டிய நிலையில் மேற்கண்ட பணிகளை கள ஆய்வு செய்ய வேண்டி நகராட்சியில் Work Inspector இல்லாத காரணத்தினால் ஒப்பந்ததாரர் மூலம் மூன்று தொழில்நுட்ப பணியாளர்கள், ஒப்பந்த அடிப்படையில் நியமித்துக்கொள்ள வேண்டிய நிலை உள்ளது. எனவே மேற்கண்ட பணியளர்களை ஒப்பந்ததாரர் மூலம் ஒரு ஆண்டுகளுக்கு நியமித்துக் கொள்ளவும். அதற்காக ஆகும் செலவினத் தொகை ரூ.20.00 இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் செலவிட மன்ற அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது..

**அலுவலக குறிப்பு:**

1. **அனுமதி வழங்கலாம்.**
2. **அவசர அவசியம் கருதி பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரவும் நகர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது**
   **நகர்மன்ற தீர்மான எண்.1404 – அனுமதிக்கப்பட்டுள்ளது**

18. உதகமண்டலம் நகராட்சியில் 36 வார்டுகளில் 27- வார்டுகளில் பாதாள சாக்கடை திட்டம் நடைமுறையில் உள்ளது. மேற்கண்ட இடங்களில் போதிய பணியாட்கள் இல்லாததால் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள காலதாமதம் ஆகின்றது. இதனால் பொதுமக்களின் சுகாதாரம் கெடும் நிலை உருவாகி உள்ளது.

எனவே மேற்படி 27 வார்டுகளில் வாழும் பொதுமக்களின் சுகாதாரத்தை கருத்தில் கொண்டு தனியார் நிறுவனம் மூலம் பணியாட்களை வினியோகம் செய்யும் நடைமுறை கடந்த மூன்று ஆண்டுகளாக நடைமுறைபடுத்தப்பட்டு வருகின்றது. எனவே காந்தல் மற்றும் நகர் பகுதிகளுக்கு தேவையான தற்காலிக பணியாளர்கள் ஒரு ஆண்டுகள் 6- நபர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. மேற்கண்ட பணிக்கான தோராய

மதிப்பீட்டு தொகை ரூ.22.00 இலட்சத்திற்கு குடிநீர் நிதியில் பணிமேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. **அனுமதி வழங்கலாம்.**
2. **அவசர அவசியம் கருதி பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரவும் நகர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது**

   **நகர்மன்ற தீர்மான எண்.1405 – அனுமதிக்கப்பட்டுள்ளது**

19. உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட காந்தல் பென்னட் மார்க்கெட் அருகில் உள்ள கடை எண். 2776 , திரு.கே.இ.கிருஷ்ணதாஸ் அவர்கள் பயன்படுத்தி வந்தார். ஆனால் 2016ம் ஆண்டு முதல் நகராட்சி ஆணையாளர் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில் அந்த கடையை நகராட்சி தூய்மை பணியார்களுக்கு அறை இல்லாததால், அந்த கடையை வார்டு அலுவலகமாக மாற்றப்பட்டது. 2016 - முதல் தற்பொழுது வரை திரு.கே.இ.கிருஷ்ணதாஸ் அவர்களின் பெயரில் கேட்பு எடுக்கப்பட்டு வருகிறது. எனவே மேற்கண்ட கேட்பில் உள்ள வரிவிதிப்பினை (வரி எண். 2776) நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்**

**நகர்மன்ற தீர்மான எண்.1406 – அனுமதிக்கப்பட்டுள்ளது**

20. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட அப்பர் காந்தல் பகுதியில் நகர்புற ஆரம்ப சுகதார நிலையம் அமைக்க ரூ.120.00 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்ப்பட்டுளளதன் அடிப்படையில் 35 சென்ட் நகராட்சிக்கு சொந்தமான காலி இடம் தேர்வு செய்யப்பட்டு கட்டிடம் அமைக்கப்பட உள்ளதால், அப்பகுதியில் உள்ள மண் திட்டை அகற்றி தடுப்புச்சுவர் அமைக்கும் பணிக்கு ரூ.17.00 இலட்சம் மதிப்பீடு தொகை நகரமன்ற தீர்மான எண். 928/31.1.2023ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. ஏற்கனவே தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டில் 3.00மீ உயரத்திற்கு மண் திட்டினை அகற்றி தடுப்புச்சுவர் அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆனால் தற்பொழுது பணி மேற்கொள்ளும்போது, சுமார் 6.00 மீ உயரத்திற்கு தடுப்புச்சுவர் அமைக்க வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட பணி மேற்கொள்ள கூடுதலாக ஆகும் உத்தேச செலவினம் ரூ.12.00 இலட்சத்திற்கு பணி மேற்கொள்ளவும் திருத்திய மதிப்பீட்டிற்கு அனுமதி வேண்டியும் நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்**

**நகர்மன்ற தீர்மான எண்.1407 – அனுமதிக்கப்பட்டுள்ளது**

21. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 12-ல் சேன்ட் ராக் காலனி பகுதியில் உள்ள நகராட்சி சாலை அருகில் மண் சரிவு ஏற்பட்டு பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே மேற்கண்ட இடத்தில் தடுப்புச்சுவர் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.6.00 இலட்சத்திற்கு நகரமன்ற தீர்மான எண். 257/ 31.05.2022ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. பணி மேற்கொள்ளும்போது, தடுப்புச்சுவர் அமைக்க வேண்டிய தடுப்புசுவர் நீளம் மதிப்பீட்டைவிட 7.00 மீ நீளம் அதிகமாக உள்ளது எனவே ஏற்கனவே தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையைவிட கூடுதலாக ரூ.3.00 இலட்சம் ஆகிறது. எனவே கூடுதலாகும் செலவினத் தொகையை நகராட்சி பொதுநிதியில் பணி மேற்கொள்ளவும் திருத்திய மதிப்பீட்டிற்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**நகரமன்றம் அனுமதி வழங்கலாம்**

**நகர்மன்ற தீர்மான எண்.1408 – அனுமதிக்கப்பட்டுள்ளது**

22. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித எண். ROC No.19009/2022/SBMI, நாள் 28.08.2023ல் Swatchh Bharath Mission (u) 2.0 Solid Waste Management திட்டத்தின் கீழ் Bio-mining முறையில் குப்பைகளை பிரித்தெடுக்கும் பணிக்கு கூடுதலாக 27,000.00 க.மீ க்கு ரூ.2.08 கோடி மதிப்பீட்டில் திட்ட பிரேரணைகள் (Detailed Project Report) தயார்செய்து அண்ணா பல்கலை கழகம், சென்னை அவர்களிடம் அறிக்கை பெற்று DPR சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. எனவே தீட்டுக்கல் உரக்கிடங்கில் உள்ள குப்பைகளின் அளவினை Drone Camera மூலம் அளவீடு செய்யப்பட வேண்டியுள்ளதாலும் திட்ட ஆலோசகர் மூலம் மதிப்பீடு தயார் செய்து சமர்ப்பிக்க மதிப்பீட்டு தொகையில் 1 % திட்ட ஆலோசகருக்கு வழங்குவதற்கு நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்**

**நகர்மன்ற தீர்மான எண்.1409 – அனுமதிக்கப்பட்டுள்ளது**

23. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 25-ல் கீழ்போகி தெரு பகுதியில் பாதாள சாக்கடை இணைப்பு இல்லை. மேலும் மேற்கண்ட பகுதி மக்கள் தங்களது கழிவுநீர் இணைப்பை அருகில் உள்ள கால்வாயில் இணைப்பு கொடுத்துள்ளனர். இதனால் சுகாதார சீர்கேடு ஏற்படும் வாய்ப்புள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட

நடைபாதையில் பாதாள சாக்கடை குழாய் இணைப்பு மற்றும் தொட்டிகள் அமைக்கும் பணி மேற்கொள்வது மிகவும் அவசியமானதாகும். எனவே மேற்கண்ட பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.4.95 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி வடிகால் மற்றும் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண்.1410 – அனுமதிக்கப்பட்டுள்ளது**

24. இந்நகராட்சியில் திட்டப்பணிகளுக்கு 2022 – ம் ஆண்டில் மதிப்பீடு தயாரிக்கும்போது சரக்கு மற்றும் சேவைவரி 12% சேர்த்து மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பட்டியல் வழங்கப்பட்டுள்ளது. GST Counsil Department of Revenue Ministry of India Government of India அவர்களால் 18.07.2022 முதல் 12% இருந்து 18% சதவிதமாக தொகை மாற்றம் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

M/s.Murali & Co ஒப்பந்ததாரர் இந்நகராட்சியில் 18.07.2022ற்கு பின்னர் பணி மேற்கொள்ளப்பட்டு. பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளதில் 12% சதவீதம் கணக்கிட்டு பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ஒப்பந்ததாரருக்கு 18% சதவீதம் கணக்கிட்டு மீதமுள்ள 6% சதவீதம் தொகை ரூ.31,04,500.04 ஒப்பந்ததாரருக்கு வழங்க மன்றத்தில் அனுமதி வேண்டப்படுகிறது..

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண்.1411 – அனுமதிக்கப்பட்டுள்ளது**

25. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 21-ல் அப்சரா லாட்ஜ், பெரிய பள்ளிவாசல் அருகில் உள்ள மழைநீர் கால்வாய் மிகவும் பழுதடைந்துள்ளதால் மேல் பகுதியிலிருந்து வரும் மழைநீர் குடியிருப்பு பகுதி வழியாக வருவதால் அடிக்கடி அருகிலுள்ள குடியிருப்புக்குள் மழைநீர் புகுந்து விடுகிறது. எனவே மேற்கண்ட இடத்தில் பொதுமக்கள் நலன் கருதி பழுதடைந்துள்ள மழைநீர் கால்வாயினை சீரமைத்து தரும்படி நகரமன்ற தலைவர் அவர்களின் கோரிக்கையின் பேரில் இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டு மழைநீர் கால்வாயுடன் கூடிய கான்கீரீட் மூடி அமைக்கும் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.9.80 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண்.1412 – அனுமதிக்கப்பட்டுள்ளது**

26. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் "சாலை பாதுகாப்பு ஆய்வு கூட்டத்தில்" கீழ்கண்ட சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளதால் சாலைகளை சீரமைத்து தரும்படி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தியதன் பேரில்

| | |
|---|---|
| 1. | ஐந்துலாந்தர் பகுதியிலிருந்து புளூமவுண்டன் சாலை வரை |
| 2. | ஐந்துலாந்தர் முதல் அப்பர் பஜார் டாஸ்மார்க் கடை வரை |
| 3. | எட்டின்ஸ் சாலை முதல் B.S. மருத்துவமனை வரை |
| 4. | ராட்டன் டாடா சந்திப்பு பகுதி |
| 5. | செயின்ட் மேரிஸ் ஹில் சந்திப்பு சாலை |
| 6. | கூட்ஸ் ஷெட் சாலை பாப்னா ஜுவலர்ஸ் அருகில் |
| 7. | கூட்ஸ் ஷெட் சாலை சந்திப்பு |
| 8. | கூட்ஸ் ஷெட் சாலை JD Mart அருகில் |
| 9. | ஜெயில் ஹில் போலீஸ் குடியிருப்பு சாலை |
| 10. | புதுமந்து காவல் நிலையம் முதல் பாரஸ்ட் கேட்சாலை வரை |

உள்ள சாலைகளில் தார் ஒட்டும் பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு பணியினை மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண்.1413 – அனுமதிக்கப்பட்டுள்ளது**

27. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 27ல் தமிழ்நாடு மின்சார வாரியம் அலுவலகம் முதல் குட்ஷெப்பர்டு பள்ளி வளாகம் வரை தெருவிளக்குகள் இல்லாத காரணத்தால் இரவு நேரத்தில் சாலையை கடக்க பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள்/ எனவே மேற்படி சாலையில் 13 எண்கள் தெரு விளக்குகள் மற்றும் பிட்டிங்குகள் பொருத்தி

தரும்படி நகரமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கை விடுத்துளார்கள். எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் தெரு விளக்குகள் அமைக்க நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண்.1414 – அனுமதிக்கப்பட்டுள்ளது**

28. இந்நகராட்சிக்கு உட்பட்ட பழைய உதகை பகுதியில் உள்ள நீர் நிலைகளால் இருந்து பழைய உதகை பகுதி, ஸ்டோன் ஹவுஸ் ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அவ்வாறு மேற்கண்ட பகுதிகளுக்கு வழங்கப்படும் குடிநீர் ஆனது நேரடியாக வழங்கப்பட்டு வருகிறது. எனவே மேற்கண்ட நீர்நிலையில் இருந்து வழங்கப்படும் குடிநீரில் குளோரின் சேர்த்து வழங்கப்பட வேண்டியது அவசியம் ஆகிறது. எனவே மேற்கண்ட பகுதிகளில் பாதுகாப்பான குடிநீர் வழங்க 100 kg குளோரின்சிலிணடர் (Chlorination plant) அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.12.00 இலட்த்திற்கு நகராட்சி குடிநீர் நிதியில் பணி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண்.1415 – அனுமதிக்கப்பட்டுள்ளது**

29. இந்நகராட்சிக்கு உட்பட்ட மேல் கோடப்பமந்து பகுதியில் உள்ள நீர் நிலையில் இருந்து அம்பேத்கர் காலனி, கீழ்க் கோடப்பமந்து, மேல் கோடப்பமந்து, வண்ணாரப் பேட்டை, ஆரணி ஹவுஸ் ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அவ்வாறு மேற்கண்ட பகுதிகளுக்கு வழங்கப்பட்ட குடிநீர் ஆனது குளோரின் சேர்த்து வழங்கப்படாமல் நேரடியாக குடிநீர் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. எனவே மேற்கண்ட ஒரு நீர் நிலைகளில் இருந்து வரும் குடிநீர் குளோரின் சேர்த்து வழங்கப்பட வேண்டியது அவசியம் ஆகிறது. எனவே பாதுகாப்பான சுத்தமான குடிநீர் வழங்கப்பட 100 kg அளவு கொண்ட சிலிண்டர் (Cholrination plant) அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.14.00/- இலட்சத்திற்கு நகராட்சி குடிநீர் நிதியில் பணி செய்ய நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதிக்கலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண்.1416 – அனுமதிக்கப்பட்டுள்ளது**

30. இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.15 பழைய உதகை பகுதியில் உள்ள நகராட்சி கழிப்பிடம் ஆனது மிகவும் பழமையானதாகவும், பழுதடைந்தும் உள்ளதால் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் இந்த கழிப்பிடத்தை பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் உள்ள நகராட்சி கழிப்பிடத்தை இடித்து அகற்றி விட்டு புதிதாக கழிப்பிடம் அமைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பிட்டுத்த தொகை ரூ.20.00/- இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதிக்கலாம்**

**நகர்மன்ற தீர்மான எண்.1417 – அனுமதிக்கப்பட்டுள்ளது**

31. உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட காந்தல் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் 20 Hp Aeration மோட்டார் 4 எண்கள் மற்றும் Gear Box 3 எண்கள் உயர்மின் அழுத்தம் காரணமாக பழுதடைந்துள்ளது. எனவே மேற்கண்ட மின் மோட்டார்கள் மற்றும் கியர்பாக்ஸ் பழுது நீக்கம் செய்வது மிகவும் அவசியமானதாகும் காந்தல் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள மின் மோட்டார்கள் பழுது நீக்கம் செய்ய தயாரிக்கப்பட்ட உத்தேச செலவினம் ரூ.9.95 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்,**

**நகர்மன்ற தீர்மான எண்.1418 – அனுமதிக்கப்பட்டுள்ளது**

32. உதகமண்டலம் நகராட்சி மினிகார்டன் கழிவு நீரேற்றும் நிலையத்தில் 100Hp Nonclog Sewage Motor பழுதடைந்துள்ளது. மேலும் 50 Hp Non Return Valve பழுதடைந்துள்ளதால் 50 Hp மற்றும் 100Hp மின் மோட்டாரினை இயக்க இயலாத சூழ்நிலை உள்ளது. எனவே மேற்கண்ட மின் மோட்டாரினை பழுது நீக்கம் செய்வது மிகவும் அவசியமானதாகும். எனவே மினகார்டன் கழிவுநீரேற்றும் நிலையத்தில் உள்ள மின் மோட்டாரினை பழுது நீக்கம் செய்ய தயாரிக்கப்பட்ட உத்தேச செலவினம் ரூ.3.905 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்,**

**நகர்மன்ற தீர்மான எண்.1419 – அனுமதிக்கப்பட்டுள்ளது**

33. உதகமண்டலம் நகராட்சியில் காந்தல் கழிவு நீரேற்றும் நிலையத்தில் ( OCMS) Online Effluent Water continuous Monitoring System பொருத்தப்பட்டு தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்துடன் இணைத்து செயல்படுத்தப்பட உள்ளது. இப்பணியில் மினிகார்டன் கழிவு நீரேற்று நிலையத்திலிருந்து மற்றும் காந்தல் முக்கோணம் கழிவு நீரேற்று நிலையத்திலிருந்து வரும் கழிவுநீர் முறையாக சுத்திகரிக்கப்பட்டு, சுத்திகரிக்கப்படும் நீரின் தரத்தை மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம், புதுடெல்லி அலுவலகம் வரை கண்காணிக்கப்படும். எனவே காந்தல் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் தினசரி 3 எண்கள். டெக்னீஷியன் & BE/Diploma பணியார்களை கொண்டு நீரின் தரத்தை கண்காணித்து Data எடுப்பதற்காக வருடாந்திர பராமதிப்பு ஓராண்டுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.25,00,000/- மேலும் ஒவ்வொரு வருடமும் வருடாந்திர பராமரிப்புத் தொகை கூடுதலாக 4.75 சதவீதமும் ஆகும். எனவே மேற்படி தொகையை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்,**

**நகர்மன்ற தீர்மான எண்.1420 – அனுமதிக்கப்பட்டுள்ளது**

34. உதகமண்டலம் நகராட்சி மினிகார்டன் கழிவு நீரேற்றும் நிலையத்தில் 2 எண்கள் 150 KVA திறனுள்ள மின் மாற்றிகள் (Transformer ) 1997 ம் ஆண்டு அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மினிகார்டன் கழிவுநீரேற்றும் நிலையத்தில் இரவு நேரங்களில் அதிக மின் அழுத்தம், அதிக மின பளு இல்லாத காரணத்தாலும், திறன் காரணி குறைவு, மின் ( power factor ) ஏற்ற இறக்கம் ஏற்படுகிறது. இதனால் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அபராதம் ஒரு மாத்திற்கு ரூ.80,000 வரை கூடுதலாக மின் கட்டணம் செலுத்த வேண்டிய நிலை உள்ளது. எனவே மேற்கண்ட (Transformer) மற்றும் இதர மின் உபகரணங்களை மாற்றியமைப்பது மிகவும் அவசியமானதாகும். எனவே பதிலாக மேற்கண்ட (Transformer) களுக்கு புதிதாக (Transformer) அமைக்கும் பணிக்கு நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்,**

**நகர்மன்ற தீர்மான எண்.1421 – அனுமதிக்கப்பட்டுள்ளது**

(ஒப்பம்)xxxx

**நகரமன்ற தலைவர் ,**

**உதகமண்டலம் நகராட்சி.**



ஆணையாளர்,

உதகமண்டலம் நகராட்சி